# போர்வாள்

> ஜபமாலை உருட்டுவதை விட்டுவிடு. அத்துடன் பாட்டையும் மந்திரத்தையும் விட்டுவிடு. தாளிட்டு கோயிலில் இருண்ட மூலையில் யாரைப் பூஜிக்கிருய்? கண்களைத்திற. கடவுள் உன்முன் இல்லை என்பதை அறி. நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் பாட்டாளி மக்களிடமும் ஏழை உழவர்களிடமுமே கடவுள் இருக்கிருர். ஆகவே நீயும்கூட உன் காஷாயத்தை விலக்கி மண்ணில் வந்து உழைக்கவா.
>
> — தாகூர்.


ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர் வார வெளியீடு


தனி இதழ் அணு 1½
வெளி நாடு அணு 2

வாள் 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆனி 17
2—7—49 சனிக்கிழமை

வீச்சு 44


தெப்பக்குளம்;
திருச்சி.




ஐக்கிய மாகாண ஆட்சியாளர் இந்தியை அரசாங்க மொழியாக ஆக்கிவிட்டனர். ஆனால் அரசாங்க அலுவல்களை நடத்துவதற்குத் தேவையான சொற்களே இந்தி மொழியில் கிடையாது. எனவே பிற மொழிகளிலிருந்து 20000 சொற்களை இதற்காக கடன் வாங்கித் தரும்படி, ஐ. மா. ஆட்சியாளர் இந்தி மொழி அறிஞர்களை வேண்டிக் கொண்டிருக்கின்றனர். இந்தியைத் தாய்மொழியாகக்கொண்ட வட்டாரத்திலேயே இந்தியின் 'பவிசு' இப்படி இருக்கிறது! இங்கிலையில் தென்னுட்டில் இந்தியை நுழைக்கின்றனர் சென்னை ஆட்சியாளர்கள்! என்ன அறிவு தீட்சண்ணியம்!

---

## ஒரு பள்ளிக்கூடத்தைத் திறப்பவன் ஒரு சிறைச்சாலையை மூடுபவன் ஆகிருன்.

—விக்டர் யூகோ.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மணியம்மையார் செய்திருக்கிற அளவுகூட நாம் இபக்கத் தொண்டாற்றவில்லை என்று பெரியார் கருதுகிறாரா? நம்மிலே பலர் குடும்ப வாழ்க்கையைத் துறந்து சொத்து சுகங்களை மறந்து தியாக வாழ்க்கையை மேற்கொண்டு கட்சிப் பணியே இயக்கப் பணி என்று அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வந்தோமே அதெல்லாம் என்ன பொய்யா? கட்சிப் பணியிலே ஈடுபட்ட காரணத்தால் கண் இழந்தவர்கள், கால் ஒடிபட்டவர்கள், சிறைவாழ்வு பெற்றவர்கள், தடியடியால் சுருண்டவர்கள், ஊரார் ஏசலுக்கு ஆளானவர்கள், அண்ணன் தம்பிகளாலேயே சந்தேகிக்கப் பட்டவர்கள் என்றெல்லாம் பல்லாயிரவர்கள் உண்டே கட்சியில் அவர்கள் எல்லாம் என்ன தாலமுத்து—நடராசனைப் போல செத்தொழிந்தா போய் விட்டார்கள்? பெரியாரின் நம்பிக்கையைப் பெறக்கூடிய "புண்ணிய புருஷர்கள்" நம்மிலே ஒருவர் கூடவா இல்லை, கூறலாமா அவர் இதுபோல, எத்தனைஎத்தனை ஆயிரம் பேர் தங்கள் சொந்த வாழ்க்கையை தத்தம் செய்துவிட்டு கட்சிப்பணி புரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் உள்ளம் சுக்கு நூறாக உடைந்துவிடாதா பெரியாரின் இந்த வார்த்தையைக் கேட்டால்? தன்னிடத்திலும் மணி அம்மையினிடத்திலும் தவிர வேறு யாரிடத்திலும் நம்பிக்கையில்லை என்று பெரியார் கூறிவிட்ட பிறகு இனி, கட்சியில் நமக்கு இடம் ஏது? மனிதப் பண்பு படைத்த யார்தான் இனி எப்படி கட்சியில் இருக்க முடியும்? இருப்பவர்கள் எப்படி நாட்டில் தலைநிமிர்ந்து நடக்க முடியும்?

எனவேதான் நாங்கள் இருவரும் பல்லாயிரக்கணக்கான ஏனைய திராவிடர் கழக உறுப்பினர்களைப் போலவே இனி பெரியாருடன் ஒத்துழைக்க முடியாத நிலைமைக்கு பெரியார் அவர்களாலேயே கொண்டு வரப்பட்டுவிட்டோம் என்பதை நாட்டு மக்கள் அனைவருக்கும் இதன்மூலம் மிக மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்போதும் நாள் கடந்து விடவில்லை. இன்னமும் திருமணம் நடந்து விடவில்லை. என்ன ஆனாலும் சரி பெரியாருடன் ஒத்துழைக்கவே கூடாது என்ற எண்ணமும் நமக்கு இல்லை. எப்படியாவது பெரியாருடன் மீண்டும் ஒத்துழைக்கும் வாய்ப்பு ஏற்படாதா என்பது தான் நம் ஆசைகூட. இப்போது கூட பெரியார், அவர் செய்து கொள்ளவிருக்கும் பொருந்தாத் திருமண ஏற்பாட்டை ரத்து செய்துவிட்டு கட்சியில் உள்ள அனைவரிடமும் நம்பிக்கை இல்லை என்று கூறிய வாசகத்தையும் வாபீஸ் பெற ஒப்புக்கொள்வாரானால், வழக்கம்போல அவருடன் ஒத்துழைக்கவும், அவர்தம் தலைமையின் கீழிருந்து பணியாற்றவும் எப்போதும் போல நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.

இவ்வளவும் எழுதிய பிற்பாடும் கூட நம் பெரியாரிடமிருந்தா நாம் விலகிநிற்க நேரிட்டு விட்டது என்பதை எண்ணிப் பார்க்கப் பார்க்க எங்கள் உள்ளம் சோகத்தால் துடிக்கத்தான் செய்கிறது, எங்கள் உடல் துக்கத்தால் பதைக்கத்தான் செய்கிறது, எங்கள் கரங்கள் இந்த வார்த்தைகளை எழுதும்போதே நடுங்கத்தான் செய்கின்றன. நம் பெரியாரை விட்டா விலகி நிற்கிறோம் என்று எண்ணி எண்ணி எங்கள் கண்கள் நீரைப் பொழியத் தான் செய்கின்றன. அவரிடமிருந்து விலகும் இந்த வேளையில் கூட அவருடன் இதுநாள்வரை பழகிவந்ததால் உள்ள பாசம் எங்களை "என்னவோ" செய்கிறது. என்றாலும் கடமை உணர்ச்சி, தவறு செய்பவர் தலைவராகவே இருந்தாலும் தவறு தவறுதான் என்பதை எடுத்துக் காட்ட வேண்டிய பொறுப்புணர்ச்சி திராவிடர் கழகத்தைச் சேர்ந்த ஆயிரமாயிரம் மக்களைப் போலவே எங்களையும் அவரிடமிருந்து விலகிநிற்கச் செய்கிறது என்பதை அனைவர்க்கும் தெரிவித்துக் கொள்கிறோம் வணக்கம்.

**காஞ்சி மணிமொழியார்**
**மா. இளஞ்செழியன்.**

---

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாக்குவார்! எதிரிகளின் கொட்டத்தை அடக்க திட்டம் தருவார்! ஆனால் தந்தையை பாண்டிய நாட்டு மன்னனை — திருத்த துணிந்து முன் வரமாட்டார்! இங்கு தான் தங்களின் வேலை ஆரம்பமாக வேண்டும்! என் அண்ணாவைப் போய்ப் பாருங்கள்! யோசனை கூற வேண்டிய அவசியம் உங்களுக்கிருக்காது, செயலில் துணிந்து இறங்கும்படி அவரைக் கட்டாயப் படுத்துங்கள்! காமக் கனலில் வீழ்ந்துவிட்ட மன்னனை மீட்க வேண்டுமென்று சொல்லுங்கள். சோழன் கப்பங்கட்ட மறுத்துவிட்டது தங்களுக்குத் தெரியும். சேரனும் அவனும் சேர்ந்து கொண்டு பாண்டிய நாட்டைத் தாக்க திட்டமிட்டிருக்கிறார்கள் என்று நேற்றுதான் ஒற்றர்கள் வந்து மன்னனிடம் கூறினார்கள் ......என் தந்தையைப் பற்றிக் கவலைப் படாதீர்கள், பாண்டியநாடு வாழ வேண்டும், வஞ்சகர்களின் வலையினின்று மீட்டு வாழச்செய்ய வேண்டியது, என்னைக் காதலிக்கும், மனைவியாக ஏற்றுக் கொள்ளப் போகும் தங்களுடைய கடமையாகும்......"

"கண்ணே! நீ கவலைப் பட்டுப் பயனென்ன? எனக்கும் பெருத்த வேதனையாகத்தானிருந்தது! இதோ செல்கிறேன்! உன் அண்ணா இப்பொழுது எங்கிருக்கிறார்?"

"பாசறையிலிருப்பார்!"

மலர்க்கோதை இப்படிக் கூறி முடித்ததும், மேடைக்குப்பின்பக்கத்திலிருந்த தாழை இலை வேகமாக ஆடியது! நாங்கள் திரும்பிப்பார்த்தோம் தாழை இலையைக் கிழித்துக் கொண்டு ஒரு வாள் வருவதைக் கண்டதும் திடுக்கிட்டோம்! "அய்யோ" என்றலறினாள் இளவரசி!

(தொடரும்)


## படித்துவிட்டீர்களா?

| | | |
|---|---|---|
| அறிஞர் அண்ணா | 0 | 5 |
| திராவிடஸ்தான் வேண்டாமா | | 8 |
| ஈரோட்டுப் பாதை | 0 | 6 |
| பெண்கள் போராட்டம் | 0 | 6 |
| பெண்கள் புரட்சி | 0 | 14 |
| ஆரியத்தால் விளைந்த கேடு | 0 | 6 |
| திராவிடம் என்றால் என்ன | 0 | 6 |
| சித்திரபுத்திரன் | 0 | 6 |
| புதியதோர் உலகு | 0 | 6 |

## பகுத்தறிவுப் பாசறை
பவழக்காரத் தெரு சென்னை 1.

# தலைவரே தவறினாலும் குற்றம் குற்றமேதான்!

## நெஞ்சம் பொறுக்கவில்லை!

[க. அன்பழகன்]

இந்நாள்வரை, சுயமரியாதைச் சுடர், சீர்திருத்தச் செம்மல், திராவிடத் தந்தை, தமிழர் தலைவர் என நம் அனைவராலும் போற்றப்பட்டு வரும், பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள், தமது தள்ளாதபருவத்தில், வயது 72 என்றபோதிலும், திருமணத்திற்கு, பதிவுத் திருமணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்து வரும் செய்திகேட்டுத் திடுக்கிட்டுத் துயருறாத, துக்கத்திற்கும் வெட்கத்திற்கும் ஆளாகாத, இயக்கத் தோழரோ, உண்மைத் தமிழரோ எவரும் இருக்க முடியாது.

தமிழகமே அதிர்ச்சியடைந்திருக்கிறது, இந்த எதிர்பாராத, எதிர்பார்த்திருக்கமுடியாத செய்தியைக்கேட்டு! எவரும் இதை எதிர்பார்க்க முடியாத வகையிலே—பெரியார் ஈ. வெ. ரா. இதுவரை நடந்து வந்தார் என்பது மட்டுமேயன்றி, அவரும் அவரைச் சேர்ந்த நாமும் நாட்டிலே நடத்திவந்த பிரச்சாரப்படி, இப்படி ஒரு திருமணம், அதிலும் இந்த வயதில் தலைவர் பெரியார் செய்து கொள்ளத் துணிவார் என்று எதிரிகளும் கனவிலும் எதிர்பார்த்திருக்க வியலாது.

தமிழ்நாடு முழுவதுமே ஒரு மாபெரும் புரட்சிக்காரர் என்று போற்றப்பட்டுவந்த ஒருவர்—தனது பேச்சுக்களிலே பொதுவாகவும், திருமணப் பேச்சுக்களிலே முக்கியமாகவும், கட்டுரைகளிலே காரசாரமாகவும், சுமார் 25 ஆண்டுகளாகப் பொருத்தமற்ற திருமணங்களையெல்லாம் கண்டித்து வந்ததற்குப்பின் தமது 72-வது வயதில் 21 வயதுள்ள ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறார் என்பது மட்டுமேயன்றிச் செய்துகொள்ள எண்ணினார், என்பதேகூட, அந்தச் சீர்திருத்த இயக்கத்தின் தலையிலே ஒரு மாபெரும் பழியைச் சுமத்துகின்ற செயலேயாகும்.

திருமணியம்மையைக் குறித்துத் தனக்குத் தொண்டுசெய்ய வந்த ஒரு பெண்ணென்றும், தனது மகளைப்போல் கருதப்படும் ஒரு குழந்தையென்றும், அப்பெண் தன்னோடு வருவதாலேயே சந்தேகிப்பது மனிதத்தன்மை அல்லவென்றும் பலப்பல கூட்டங்களிலும் எழும்பிய கேள்விகட்குப் பதிலாகக் கூறிக்கொண்டு வந்துள்ள பெரியார் திடீரென்று இப்பொழுது, பெண்ணைப்போலக் கருதியிருப்பதாகக் கூறிவந்துள்ள அதே மகளையே மனைவியாக்கிக் கொள்ள முற்பட்டிருப்பதை—மானமுள்ள எவர்தான் எப்படிச் சகித்துக்கொள்ள முடியும்?

இந்நிலை ஏற்படக்கூடாது என்பதற்காக, இதுவரை பெரியார் அவர்களின் நம்பிக்கைக்கு உரியவர்களாக இருந்து வருகின்ற முக்கிய அன்பர்கள் பலரும், நேரிலேயே மன்றாடிக் கேட்டுக்கொண்டும், கடிதங்கள் மூலம் வேண்டிக்கொண்டிருந்தும், அவைகளைக் குறித்து ஒரு சிறிதும் இலட்சியம் செய்யாமல் 28-6-49 'விடுதலை'யில் ஒரு அறிக்கை வெளியிட்டிருப்பதும், தனது தவறை மறைப்பதற்கென்றே, கழகத்தில் உள்ள எவருக்கும், எந்தவித யோக்கியதையும் தகுதியும் இல்லை என்று அனைவரையும் குற்றஞ்சாட்ட முனைந்திருப்பதும், அவர் செய்யும் தவறினுடைய கொடுமையை மேலும் அதிகப்படுத்துகின்றது. அந்த அறிக்கையில், இந்தத் திருமணத்தை, திருமணம் என்று சொல்வதேகூடத் தவறு என்று பொருள்படும்படித் திருமணம் என்ற பெயரால் இது ஒரு ஏற்பாடு, என்றும், இந்த ஏற்பாடு, தனது சொத்துக்களுக்கும், இயக்க சொத்துக்களுக்கும் தனது அபிமானத்துக்கு உரியவராக இருந்து வந்துள்ள ஒரு பெண்ணை—உரிமையுள்ளவராகச் செய்வதற்காகவும், வருங்காலத்தில் தனது இயக்கமும் அவரையே தலைவராகக் கொண்டு. அவரிடத்திலே ஒப்படைக்கப்பட்டுள்ளபடியே நடக்கவேண்டுமென்பதற்காகவும் செய்யப்படுவதாகவும் தெரிவித்திருப்பதையும், ஒரு மாபெரும் இயக்கத்தையே பல லட்சக் கணக்கான மக்களுடைய ஆதரவுபெற்று இயங்கி வரும் ஒரு இயக்கத்தின் அமைப்பையே—இயற்கையாக மக்களுடைய அன்பால் அவருக்குக் கிடைத்துள்ள உரிமையையும் அதிகாரத்தையும் கொண்டு, **சர்வாதிகார முறையில்—ஜனநாயக முறைக்கு முற்றிலும் மாறாக**—தான் நம்பிக்கைகொண்டுள்ளார் என்ற ஒரே காரணத்திற்காக ஒரு சிறு பெண்ணிடத்தில், ஒப்படைக்கப்போவதாகக் கூறுவதையும் யார்தான் ஏற்றுக்கொள்ள முடியும்?

உண்மையில்—சீர்திருத்தக் கொள்கைகட்கு மாறுபாடாக நடைபெறும் இந்தப் பொருந்தாத் திருமணத்தை நான் மட்டும் அல்ல இயக்கத் தோழர்கள் எல்லோருமே வன்மையாகக் கண்டிக்கின்றார்கள். இத்திருமணம் இயக்கத்திற்காகச் செய்யப்படும் ஒரு ஏற்பாடே தவிர—திருமணமல்ல, என்று தலைவர் கூறுவதாயினும், இந்தத் திருமணத்தைப்போலவே இந்த ஏற்பாடும் நீதியற்ற நியாயமற்ற—நேர்மையற்ற, ஜனநாயக முறைக்கும், இயக்க வளர்ச்சிக்கும் தீமையான, இயக்கத் தோழர்கள் எல்லோரையுமே ஒரு முகமாக அவமானத்திற்குள்ளாக்கும் செயலாகையால், தலைவர் பெரியாரிடத்தில் நாம் நம்பிக்கையை இழந்தவர்களாகிவிட்டோம்.

இதைச் செய்வது தலைவரே என்றபோதிலும் குற்றம் குற்றமேதான் என்பதில் ஐயம் சிறிதும் இல்லை இதைக் கேட்டபின் அவரைத் தலைவராகக் கொள்ள நெஞ்சம் சிறிதும் பொறுக்கவில்லை. இப்படிப்பட்ட மாபெரும் பாதகத்தைச் செய்வதினின்றும் தலைவர் ஈ. வெ. ரா. **தன்னைத் தடுத்துக் கொண்டாலன்றி**, செய்து கொள்ள விருக்கும் திருமணத்தையும்—அதன்பின் நடக்க விருக்கும் இயக்கத்தைக் குறித்த சர்வாதிகார ஏற்பாட்டையும் நிறுத்தினாலொழிய; அவரது தலைமையில் நடைபெறும் திராவிடர் கழகத்திலும், மற்ற இயக்கங்களிலும் இனி ஒரு சிறிதும் ஒத்துழைக்கமுடியாத, ஒத்துழைக்கக் கூசுகின்ற, நிலைமைக்கு ஆளாக்கப்பட்டுவிட்டோம்.

(10-ம் பக்கம் பார்க்க)

# பத்து ஆண்டுகள்! என்றாலும்!!

அண்மையில் சங்கராச்சாரியார், பிரபல மிராசுதாரர்களையும், பென்ஷன் பேர்வழிகளையுமாகப் பிடித்திழுத்து, 150 பேருக்கு 'முத்ராதிகாரிகள்' என்ற பட்டம் சூட்டி 'கேண்மின் சீட கோடிகளே! இனி நீவிர், நமது மதப்பிரசாரம் புரியுங்கள். யாகம், யக்ஞம், யோகம் முதலியன நடைபெறும்படி பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று கூறினராம்.

மித்திரனுக்கு நான் இளைத்தவனா என்று காட்டிக் கொள்ள தினமணி பத்திரிகை இந்த திவ்ய பிரபந்த சாரத்தை வெளியிட்டிருக்கிறது. ''பசுமாடுகளைக் காப்பாற்றுதல், கிழமாடுகளை அடிபட விடாமல் பாதுகாப்பது, ஏகாதசியில் ஆஸ்திகர் கோயிலுக்குப் போய் அங்கிருக்கும் புல் பூண்டுகளைப் பிடுங்கி கோயில்களை சுத்தமாய் வைத்துக் கொள்வது'' போன்ற காரியங்களை இனி குறைவறச் செய்ய வேண்டுமாம்! பிராமண யாக, யக்ஞம் நடக்க வேண்டுமாம்.

## புத்துணர்ச்சி பூக்கிறது

சங்கராச்சாரிய ஸ்வாமிகள் இவ்விதம் சனாதனப்படை திரட்டுவது கண்டு நாம் அவர்மீது காய வில்லை. இத்தகைய ''பேச்சுக்கு'' நாட்டிலே இன்னமும் இடமிருக்கிறதே, இவைகளை எடுத்துப் போட்டு விளம்பரந்தந்து உடந்தையாக இருக்கும் பத்திரிகைகள் உள்ளனவே, இப்பத்திரிகைகள்தானே சுயராஜ்யசூரர்களின் உடுக்கையாக உள்ளன, இந்நிலையில் நாடு முன்னேறுவது எப்படி என்றே கவலைப்படுகிறோம்.

நாட்டிலே இப்போதுதான் ஒருவித விழிப்பு, கொஞ்சம் பகுத்தறிவு, காரணங்காண விரும்பும் மனப்பான்மை, புத்துலக உணர்ச்சி கிளம்பி இருக்கிறது. மூட நம்பிக்கைகளும் குருட்டுப் பழக்க வழக்கங்களும் குறைந்து கொண்டு வருகின்றன. எதனையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எழுச்சி பெற்று வருகிறது. பிறவியின் பேதம் எதிர்க்கப்படுகிறது. வைதீகக் கோட்டை தகர்ந்து வருகிறது. பார்ப்பனீயம் பயந்து வாழுகிறது. புரட்சி வலுக்கிறது. புத்துணர்ச்சி பூக்கிறது.

ஆனால், வயலில் பூத்து, கண்கவர் வனப்புடன் விளங்கும் மலர்களின் மீது, தனது முரட்டுக் காலை வைத்து மிதித்து, மலரைத் துவைத்துக் கீழே புதைத்து சேறுடன் சேறாகி விடும்படி செய்யும் எருமைகள் போல, இப்போது சனாதனம், வர்ணாஸ்ரமம் என்ற பேச்சுப் பேசி, முளைத்தெழும் பகுத்தறிவைப் பாழாக்கும் 'பாவிகள்' முனைந்து நிற்கின்றனர். நாட்டின் கவனம் வேறு பக்கம் திருப்பப்பட்டு இளைஞர்கள் எண்ணத்தை இந்த நாசகாலர்கள் மீது செல்ல ஒட்டாதபடி தடுத்து தேசியக் கூட்டம் துரோகம் செய்கிறது.

இந்நாட்டிலே பெரிய பெரிய அறிவாளிகள், மேல்நாட்டுப் படிப்பில் மிளிருவோர், உலகச் சுற்றுப் பயணம் செய்தோர், விஞ்ஞான பட்டதாரிகள் உள்ளனர். அரசியல் துறையிலே அதிதீவிரவாதம் புரியும் சூரர்கள் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் தமது சிறுவிரல் கொண்டு அசைக்கவில்லை, 'நில்லு' எனச் சொல்லவில்லை, சங்கரர் சூழ்ச்சியை! பார்ப்பனீயம் கூடாது என்று துணிந்து சொல்லமுன்வரவில்லை. அரசியலில் தீவிரம்பேசிக் கொண்டு சமுதாய விஷயத்தில் பச்சை வைதீகத்துக்கு, பாழும் பார்ப்பனீயத்துங்கு நாட்டையும் மக்களையும் காட்டிக் கொடுக்கும் கூட்டமே இன்று பெருகி விட்டது.

இளைஞர்களையே எதிர்காலச் சிற்பி என்பர். அவர்கள் இதனை ஒப்புகின்றனரா என்று கேட்கிறோம். இந்த பழமைக்குப் புத்துயிர் தரும் பாதகச் செயலைக் கண்டு அவர்கள் நெஞ்சம் துடிக்கவில்லையா? மனம் பதறவில்லையா! இந்நிலையில் நாடு இந்த ஆண்டில் இருப்பது காண, வெட்கமில்லையா என்று கேட்கிறோம்.

வாணாஸ்ரமம் நிலைத்திட வேண்டுமாமே! பிராமணர், நாலு வருணத்திலும் உயர்ந்தவராமே! அவர்கள் யாகம், யக்ஞம் செய்ய வேண்டுமாமே! செய்யாது விடின் உலகிலுள்ள ஜீவராசிகளுக்கெல்லாம் கேடு சூழுமாமே, ஒப்புக்கொள்கின்றனரா நமது இளைஞர்கள் இதனை என்று கேட்கிறோம். ஒப்பவில்லை எனில் இந்த முறையை நிலைநாட்ட முனைந்து வேலை செய்ய முத்ராதிகாரிகளின் படை திரட்டப்படுகிறதே, ஒரு சங்கராச்சாரி ஊர் சுற்றி வந்து உழைக்காது, பாடுபடாது உல்லாச வாழ்வு வாழ்ந்து, ஊரை ஏய்க்கும் தந்திரத்தை உச்சாடனம் செய்து பண்டை நாட்களில் நடந்து வந்த முறைகள் நடக்க வேண்டும் என பயம் பதைப்பு இன்றிப் பகிரங்கமாகச் சொல்லித் திரிகின்றாரே, கேட்டனரா தேசிய இளைஞர்கள்?

## நாட்டுக்கு எதிர்கால வாழ்வு ஏது?

பகுத்தறிவைப் பாழாக்கி மனிதத்தன்மையை மாய்த்து பார்ப்பனர் தவிர மற்றையோரின் மானத்தைப் பறிக்கும் திட்டம் வகுத்த மனுவுக்கு வக்காலத்து வாங்கிப் பேசும் வம்பர் கூட்டத்தை அடக்கினரா? வாய் சலிக்கமட்டும் பேசுகின்றனர். வரவில்லையே சுயராஜ்யம் என வலிப்பெடுத்த உள்ளத்துடன் கூறுகின்றனர். வெள்ளையன் என்ன மகாப் பெரிய வீரனா என வரட்டு வீரம் பேசுகின்றனர். ஆனால், சமுதாயத்தின் பழைய சாக்கடையில் மக்கள் புகவேண்டும் என சங்கராச்சாரி சாற்றுகின்றாரே, இதனைக் கண்டித்தனரா? இந்த சங்கரசாற்றுக்கவியை வெளியிட்டு, பகுத்தறிவுக்குத் துரோகம் செய்யும் பார்ப்பனப் பத்திரிகையான ''மித்திரன்'' பார்ப்பன அடிமைத்தாளான தினமணி போன்றவை நாட்டில் உலவவும் வளரவும் வழி தேடுகின்றனரே, அடுக்குமா? இவர்கள் போக்கு இவ்விதமிருப்பின் நாட்டுக்கு ஏது எதிர்கால வாழ்வு என்று கேட்கிறோம்.

## மித்திரன் வலையில் சிக்கவைக்கிறது!

பண்டு இருந்ததை பார்ப்பன பத்திரிகையான மித்திரன் அ[illegible] யாதா? தினமணிக்குத் தெரியாத[illegible] தெரியும் எனினும் சங்கராச்[illegible]

யார் பேசித்திரிவது தன் சமூகத்துக்கு நலன் தருவது என்பதை உணர்ந்து மித்திரன் அதற்கு இடம் கொடுத்து மக்களை அந்த வலையில் சிக்கவைக்கிறது. பார்ப்பனரின் பாதம் வருடிப்பிழைப்பது தவிர வேறு மார்க்கமில்லை என்றநிலைக்கு வந்த சொக்கன், சுப்பன்கள் அதற்கு 'ததாஸ்து' கூறி தேவடி காத்து வாழுகின்றனர்.

யாகமாம்! யோகமாம்! யக்ஞமாம்! இவைகளைப் பிராமணர்கள் செய்ய வேண்டுமாம்!

தெரியாதா, வெட்கக்கேடான இவர்கள் கதை?

## யாகவகைகள்!

ஆற்றருகே, அழகிய தோப்பிலே பர்ணசாலை அமைத்துக் கொண்டு தென்றல் வீச, தேன் அமுதுண்டு, தேவர்களின் பிரதிநிதியாக பிராமணர்கள் வாழ்ந்து, மற்றை வகுப்பார் மாடுபோல் உழைத்து, அகில் சந்தனம் கட்டைகளாகத் தந்து, ஆடு, மாடு, மான்களை யாகத்துக்கு உதவி, பண்டம் பதார்த்தம் பால் பரிவுடன் தந்து, பாத பூஜை செய்துவாழ்ந்தகாலமும் உண்டு விஷயமறியாது வலையில் வீழ்ந்த அம்மக்களை விண் ஒளியைக் காட்டியும், விசித்திரம் புரிந்து மயக்கியும், மோட்சம் என்று கூறி ஏய்த்தும், நரகம் எனச் சொல்லி மிரட்டியும், அடக்கி ஒடுக்கி ஆண்டனர் பார்ப்பனர் ஒரு நாள்.

அக்காலத்தில்தான் யாகம் விதவிதம்!

அஜமேதயாகமும், அஸ்வமேத யாகமும், நரமேத யாகமும் மிருத்யூநாசமும் செய்து கொண்டு, மேனி சிவந்து: தொந்தி பெருத்து, மேதினியில் பார்ப்பனர் வாழ்ந்து, மான், பசுக்கன்று, பன்றி இறைச்சி வகைகளை உண்டு, சோமபானம் பருகி சொக்கி, சொகுசாக பௌண்டரீக யாகம் எனும் லீலைகள் புரிந்து நாட்டிலுள்ள பொருள் பொன் பெண் யாவற்றினுக்கும் தாமே கர்த்தாக்கள் எனப்புகன்று, தோள் வலிமை கொண்டவரின் மனவலிமையை மட்டும் மாய்த்து, மன்னுதி மன்னரும் அடிபணிய, "குடி! குடி! வெறிக்க வெறிக்க வெறிக்கக் குடி! மயங்கிக் கீழே விழும் வகையில் மாதா நீங்கலாக மற்றவரைக் கூடு" என்று கூறும் "மஹாநிர்வாண தந்திரம்" கற்று அதன்படி நடந்து, மதோன் மத்தர்களாக வாழ்ந்தனர்.

## அறைகூவுகிறோம்

நாம் எத்தனை பெரிய தேசிய வாதியாக இருப்பினும், அறைகூவி அழைத்து நமது உயிரைப் பந்தயம் வைத்து, அந்நாளில் பார்ப்பனீயம் நிலைநாட்டி நடத்தி வந்த ஏகாதிபத்தியத்துக்கு ஈடான கொடுமையுள்ள ஏகாதிபத்தியம், எங்கேனும் எப்போதேனும் இருந்ததாக எடுத்துக் காட்ட முடியுமா என்று கேட்கிறோம்.

அந்த வர்ணாஸ்ரமம் வலிவுடன் விளங்கியபோது, நாட்டில் இருந்ததைப் போன்ற கொடுமைகள், கோரங்கள், அக்ரமங்கள் ஆபாசங்கள், அவற்றை ஆதரிக்கும் ஆட்சிகள், அந்த ஆட்சிக் காலத்து சட்டங்கள், விதிகள் முறைகள், விபரீதங்கள், எந்த நாட்டிலாவது உண்டா, என்று கேட்கிறோம்.

**எத்தனை ஜாலியன் வாலா பாக்குகள் இங்கு முன்னாளில் நடைபெற்றன. எத்தனை எத்தனை ஆயிரம் டயர்கள். அப்பப்பா! எண்ணினால் நெஞ்சுவேகும்.** நினைப்பு அத்தனையும் மாறும்! ஜாலியன் வாலாபாக்கைக் கண்டித்தோம். டயரைத் தூற்றினோம். ஆனால் முன்னாளில் நடந்த ஜாலியன் வாலா பாக்குகளை, படுகொலைகளை நாம் ஜபதபாதிகள் என்று அனுமதித்தோம், முன்னாள் டயர்களை முடிசூடா மன்னராக, மோட்ச வழி காட்டிகளாகக் கொண்டோம். கெட்டோம்!

## சூத்திரன் எனில் யார்?

சங்கராச்சாரி இக்காலத்திலும் எதனை விரும்புகிறார்? மூத்ராதிகாரிகளைக்கொண்டு எதனைப் பிரசாரம் செய்யச் சொல்லுகிறார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம். அவர் விரும்பும் கலை வரின் நாம் எங்கே இருப்போம்? எண்ண, மனமிருக்கும் இளைஞர்கள் இன்றே எண்ணிப் பார்க்கட்டும். சங்கராச்சாரி குறிப்பிடும் நிலை முன்பு இருந்த போது எப்படி இருந்தோம்? சூத்திரர்களாக! சூத்திரர் எனில் யார்? 1. யுத்தத்தில் புறங்காட்டி ஓடியவன். 2. யுத்தத்தில் கைதியாகப் பிடிபட்டவன். 3. பிராமணனிடம் பக்தியால் ஊழியம் செய்பவன். 4. விபசாரி மகன். 5. விலைக்கு வாங்கப்பட்டவன். 6. ஒருவனால் கொடுக்கப்பட்டவன் 7. தலைமுறை தலைமுறையாக ஊழியம் செய்பவன்.

இந்தியர்களை வெள்ளையன் இன்று சொல்லமாட்டான் இவ்வளவு திமிருடன்! ஆனால் தப்பா கியின்றி, உடலில் உரமான நி இன்றி, உறுதியின்றி, உழைப் பின்றி, நம்மை அடிமை கொண் டவர்கள், நமக்கு இடும் இழி இது. மனு அத்தியாயம் 8, சுலோ கம் 415, இன்னமும் இருக்கி றது.

அது மட்டுமா? ஐயனே, தேசி யத் தமிழ்த்தோழனே கேள் மனு அத்தியாயம் 10ல், சூத்திர 144ல் பௌண்டரம், ஔண்டரம், திராவிடம், காம்போஜம், யவனம், சகம், பாரதம், பால்ஹீகம், சீனம், கிராதம், தாதம், கசம், ஆகிய நாட் டார் அனைவரும் சூத்திரர்கள் என்று கூறுகிறான்.

**திராவிடம் எது? அதிலுள்ளவ யார்? நாம்! நாம் சூத்திரர்!**

சூத்திரர் கடமை என்ன? சங் ராச்சாரியார் நாலுவர்ணத்தினரு தத்தமது கடமையைச் செய்த வேண்டுமென்றே கூறுகிறார்.

## கேளுங்கள் தேசியவாதிகளே!

கேளுங்கள் தேசிய வாதிகளே, மனுகூறி, அன்று பார்ப்பனீய அமுல் நடத்தி, பகுத்தறிவால் சாய்ந்து, இன்று சங்கராச்சாரி யாரால் தூக்கிவைக்கப்படும், சூத் திரர் கடமை, நிலை எது?

பிராமண பூஜை தான்!

நம்மவர் மானம் எவ்விதத்தில் பறிக்கப்பட்டது என்பதை எண் ணிப் பாருங்கள். மனு அத்திய யம் 8 சுலோகம் 365ல், "ஒரு கன் னிகை போக விருப்பத்தினால் உயர்ந்த ஜாதிப் புருஷனைச் சேர்ந் தால் அவளைக் கண்டிக்கக் கூடாது" என்று கூறிவிட்டு, அதே அத்தியாயத்தில் 374ம் சுலோகத்தில், "சூத்திரன் காவ லில்லாத பிராமணப் பெண்களைப் புணர்ந்தால் அவன் அங்கத்தை அறுத்துவிடு" எனக் கட்டளையிட் டான்.

கண்களில் இரத்தநீர் பெருக வில்லையா இந்தக் கர்ணகடூரமான சட்டத்தைக் கேட்க, என்று கேட் கிறோம்.

"சூத்திரன்" கொல்லப்பட்டால், என்ன தண்டனை தெரியுமோ! பூனை, அணில், கோட்டான், காடை, தவளை, நாய், உடும்பு, காக்கை இவைகளில் ஒன்றைக் கொன்றால்

[8-ம் பக்கம் பார்க்க]

போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆனி 17
2—7—49 சனிக்கிழமை

# எங்கள் எண்ணம்!

பெரியாரின் சிறப்பு, பெரியாரின் தியாகம், பெரியாரின் அஞ்சாமைப் பண்பாடு, பெரியாரின் அருமைபெருமைகள், பெரியார் அவர்களால் தமிழ்நாடு பெற்ற விழிப்பு, பெரியார் ஆற்றியிருக்கும் பகுத்தறிவுப் பணியின் மேன்மை, பெரியார் அவர்களை ஏன் தமிழகம் பின்பற்றவேண்டும் என்பதற்கான விளக்கம், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வீரத்தமிழர்களை வெறும் சூழ்ச்சியால் ஏய்த்துவந்த ஆரிய எத்தர்களின் ஆணவக் கோட்டைகளை பகுத்தறிவு என்னும் அணுக்குண்டை வீசி தூள்தூளாய்ச் சிதறுண்டுபோகச் செய்த பெரியாரின் பேராற்றல், பெரியார் அவர்களின் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு எழுத்தும் ஏன் திராவிட சமுதாயத்திற்குப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தாக்கீதாகக் கருதி நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்கான ஆதாரங்கள் ஆகிய இவ்வளவையும், கிழமைதோறும், பூரிப்புடனும் பெருமையுடனும் எழுதி எழுதி பெருங்களிப்பு அடைந்துவந்த நாங்கள், இந்த வாரம், பெரியார் அவர்களைக் கண்டித்து எழுதவேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமையை பெரியார் அவர்களே உண்டுபண்ணிவிட்டார்கள். பெரியார் அவர்களை, நம் உயிருக்கு உயிராய் நாம் கருதிப் போற்றிவரும் பெரியார் அவர்களை, திராவிட சமுதாயத்தின் தனிப்பெருந் தலைவர் என்று நம்மால் ஆநந்தத்துடன் அழைக்கப்பட்டுவந்த பெரியார் அவர்களை, எந்தப் பெரியாரால்தான் திராவிட இனம் தலைநிமிர்ந்து வாழமுடியும் என்று நாம் மனமார நம்பினோமோ, எந்தப் பெரியாரால்தான் தூங்கிக் கிடக்கும் தமிழர்களைத் தட்டி எழுப்ப முடியும் என்று நாம் எண்ணினோமோ, எந்தப் பெரியாரை நம் இருதய கமலத்தில் வீற்றிருக்கும் ஒப்பற்ற சீர்திருத்தத் தலைவராக எண்ணி எண்ணிப் பெருமிதம் அடைந்தோமோ, அதே பெரியார் அவர்களைக் கண்டிக்கவேண்டிய நிலை நேரிட்டுவிட்டது என்பதை நினைக்க நினைக்க, இந்தத் துர்ப்பாக்கிய நிகழ்ச்சியை எண்ணிப் பார்க்கப் பார்க்க, எங்கள் உள்ளம் துடிக்கிறது, உடல் பதறுகிறது, கைகள் நடுங்குகின்றன, கண்கள் குளமாகின்றன, இவ்வளவும் உண்மையா அல்லது எல்லாம் வெறும் கனவா என்றுகூட எங்கட்குத் தோன்றுகிறது. உண்மையாகவே இப்படி ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையே எங்கள் உள்ளம் நம்ப மறுக்கிறது. எங்கட்கு மட்டுமா இந்த நிலை, எங்கள் உள்ளமும் உடலும் கைகளும் மட்டுமா பதறுகின்றன, நாங்கள் மட்டும்தானா ஒரு சோக சித்திரமாக உலவுகிறோம், இல்லை இல்லை, திராவிடர் கழகம் என்னும் இயக்கத்தைச் சேர்ந்த எல்லோருமேதான், இந்நாள், உள்ளம் பதறியவர்களாய், வேதனை நிரம்பியவர்களாய், துக்கம் எனும் பெருங்கடலில் நீந்திக் கிடக்கும் உருவங்களாய், செய்வகை அறியாது திகைக்கும் செம்மல்களாய், இந்த சம்பவத்தை எண்ணி எண்ணி துடிக்கும் உள்ளமும் பதைக்கும் உடலும் படைத்தவர்களாய் உலவுகின்றனர்.

உண்மையிலேயே பெரியார் அவர்கள் இப்போது செய்துவரும் "ஏற்பாடு" களும், அந்த "ஏற்பாடு"களை அவர் செய்துவரும் முறைமையும், அந்த "ஏற்பாடு" கள் ஏன் அவசியம் என்பது பற்றி அவர் தந்துவரும் விளக்கங்களும் சிந்திக்கும் திறமையோ அல்லது உணர்ந்துபார்க்கும் ஆற்றலோ படைத்த எவர் உள்ளத்தையும் திடுக்கிடச் செய்யாமல் இருக்க மாட்டா.

71-வயது முடிந்து 72-வது ஆண்டு நடந்துகொண்டிருக்கிறது பெரியாருக்கு! மணி அம்மையாருக்கோ 26 அல்லது 27 வயது இருக்கும். இந்த நிலையில் இவர்கள் இருவருக்கும் இடையே திருமணம் நடப்பது என்பது நம் கொள்கைகளுக்கு முற்றிலும் புறம்பானது. 71-ஆண்டுகளை முடித்துவிட்டு, வாழ்க்கையின் சகல இன்ப துன்பங்களையும் அனுபவித்துவிட்டு, தென்னாட்டின் முதுபெருங் கிழவர் என்று பாராட்டப் பெறுகிற பெருநிலையை எய்தி, வாழ்க்கையின் கடைக்கோடியில் இருக்கும் பெரியார், 27-வயதும் நிரம்பப்பெறாத இளம் பெண் ஒருவரைத் திருமணம் செய்துகொள்வது சரி என்று யாருமே கூறமாட்டார்கள். தள்ளாத வயதடைந்த ஒரு முதியவர் இளம்பெண் ஒருத்தியைத் திருமணம் கொள்வது எவ்வளவு அநியாயமான கொடுமை என்பதை பெரியார் அவர்களும் நாமும் ஆயிரம் ஆயிரம் மேடைகளில் கல்லும் கசிந்துருகும் வண்ணம், கேட்பவர் நெஞ்சம் நீராகக் கரைந்து கனியும் வண்ணம் எத்தனையோ முறை எடுத்தெடுத்து விளக்கியிருக்கிறோம். திருமணம் என்பதே ஒத்த வயது, ஒத்த கல்வி, ஒத்த உரிமை ஆகிய இவற்றாலே ஒருவருக்கொருவர் சமநிலை உடைய ஓர் ஆணும் ஒரு பெண்ணும் செய்துகொள்ளும் வாழ்க்கை ஒப்பந்தம்தான் என்று நாம் சொல்லாத நாட்கள் கிடையாது. தள்ளாத கிழவனுருக்கும் இளங் குமரிக்கும் திருமணம் நிகழுமானால், அந்த இளங் குமரி திருமண வீட்டின் மதிற்சுவர் ஏறிக் குதித்தாவது தப்பித்து ஓடிவிடும்படி செய்யவேண்டியதே சுயமரியாதைக்காரர்கள் கடமை என்று பெரியார் பலமுறை குறிப்பிட்டிருக்கிறார். பொதுவாகவே, பொருந்தாத் திருமணங்களை எதிர்த்துப் பேசுவதிலும் எழுதுவதிலும், அத்தகைய திருமணங்களை நடக்கவொட்டாதபடி தடுப்பதிலும் தடுத்து நிறுத்துவதிலும் இந்த இருபத்தைந்தாண்டுகளாக நாம் பேருக்கமும் பெருத்த உற்சாகமும் காட்டிவந்திருக்கிறோம். பொருந்தாத் திருமணங்கள் நடைபெறவொட்டாதபடி அவற்றை எதிர்த்துப் பிரசாரம் செய்ததிலே, செய்வதிலே, இன்றளவும் சுயமரியாதைக்காரர்களாகிய, திராவிட

கழகத்தவர்களாகிய நமக்கு ஈடு, இணை, காட்டப்படக் கூடியவர்கள் யாருமே கிடையாது. பொருந்தாத் திருமணங்களை எதிர்த்து பெரியார் இத்தனை ஆண்டுகளாக பலமான பிரசாரம் புரிந்துவந்திருக்கிறார் என்பதை யாரும் மறுக்க முடியாது. செய்யப்படவிருந்த எத்தனையோ பொருந்தாத் திருமணங்கள், பெரியாரும் நாமும் செய்துவந்த பிரசாரத்தின் நல்விளைவாக, கைவிடப்பட்டு, பிறகு, பொருத்தமான முறையில் நடத்தப்பட்டதையும் நாம் கண்டிருக்கிறோம். இவ்வாறெல்லாம் நம் பிரசாரம் நற்பலன் தருவது கண்டு நாமும் பெரியாரும் எவ்வளவோ மகிழ்ச்சி அடைந்திருக்கிறோம். நாமும் பெரியாரும் மட்டுமல்ல, தமிழகமே இந்த விழிப்புணர்ச்சியையும் எழுச்சிநிலையையும் மறுமலர்ச்சியையும் கண்டு ஆச்சரியமும் ஆநந்தமும் அடைந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், திடீரென்று, பெரியார், அவரும் நாமும் இத்தனை நாட்களாக நாட்டு மக்கட்கெல்லாம் எடுத்தோதிவந்த அறிவுரைக்கு நேர்மாறாக, முற்றிலும் முரணாக, நாமெல்லாம் திடுக்கிடத்தக்க விதத்தில், எந்தப் பொருந்தாத் திருமண முறையை எதிர்த்து நாமெல்லாம் அரும்பணி ஆற்றிவந்தோமோ அதே பொருந்தாத் திருமண முறையைக் கையாள முடிவு செய்துவிட்டார் என்று சொன்னால், இதைவிட நம்மை வெட்கத்திற்கும் துக்கத்திற்கும் ஆளாக்கும் சம்பவம் வேறு இருக்க முடியாது. பெரியார் அவர்களேகூட, தான் இதுவரை செய்துவந்த பிரசாரத்திற்கு நேர்மாறாக, தானே நடந்துவிட்டு, இனி எப்படி பொதுமக்கள் முன்னால் நடமாடமுடியும் என்பது நமக்குச் சிறிதும் விளங்கவில்லை. இந்த ஒரு காரியத்தில் சொல் ஒன்று செயல் வேறாக நடந்துகொண்ட பிற்பாடு, இனி, வேறு எந்த நற்கருத்தைப் பெரியார் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொன்னால்தான் எப்படி மக்கள் இவரை நம்புவார்கள்? திராவிட நாடு பிரிவினைப் பிரச்சினையிலோ, அல்லது நாம் இன்று எடுத்துப் பேசி ஆதரித்து விளக்கிவரும் நம் ஏனைய அரசியல் சமுதாயக் கொள்கைகளிலோ, இனி, பெரியார், உறுதியாக நடந்து கொள்வார் என்றோ, அல்லது இக் கொள்கைகளுக்கும் இலட்சியங்களுக்கும் நேர் மாறாக நாளை அல்லது மறுநாள் அவர் நடக்காமல் இருப்பார் என்றோ மக்கள் தானாகட்டும், அல்லது, அவரை இதுவரை பரிபூரணமாக ஆதரித்து மனமாரப் பின்பற்றி நடந்து வந்திருக்கும் நாம் தானாகட்டும், எப்படி அவரை நம்ப முடியும்? பெரியார், சொல் வேறு செயல் வேறாக நடப்பவர் என்று மக்கள் இத் திருமண நிகழ்ச்சியைக் கொண்டு முடிவுகட்டிவிடுவார்களே, அப்படி முடிவு கட்டி விடுவார்களானால் அது தவறான முடிவு என்று நாம் கூறுவதற்குமில்லையே, கூறினால் எவரும் நம் கூற்றை ஆம் என்று தலை அசைத்து ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்களே, இத்தகு நிலையில் எப்படி, பெரியார், நாட்டையோ நம் சமுதாயத்தையோ தலைமை தாங்கி நடத்திச் செல்லமுடியும்? நாம் வெளியே போனால், வீதி வழியே சென்றால், நாலாறு பேரைக் கண்டால், இனி எப்படி தலைநிமிர்ந்து நடக்க முடியும்? மலைகுலையினும் மனம் குலையாத மாவீரன் சுயமரியாதைக்காரன் என்று உலகம் இதுவரைநம்மைப் பாராட்டிவந்ததே, ஆயிரம் ஆபத்துக்கள் வந்தாலும் சரி தங்கள் கொள்கையை மட்டும் இம்மியளவும் விட்டுக் கொடுக்காத இலட்சிய புருஷர்கள் என்று நாடு நம்மைக்கண்டுபூரிப்படைந்துவந்ததே, நினைப்பு—சொல்—செயல் மூன்றிலும் ஒரே வகையான நிலையினர் பெரியார் என்று நல்லறிவாளர்கள் எல்லாம் பாராட்டிப் பாராட்டி எழுதினரே, அந்தோ, இவ்வளவு நற்புகழுக்கும் புனிதத் தன்மைக்கும் இந்நாள் மாசு வந்து நேர்ந்ததே! பெரியார் அவர்கள் சொல்லக் கூடிய எத்தகைய சமாதானங்களும் 'இந்தத் திருமணத்தால் பெரியாரின பெயர் மீது படிந்துள்ள இழிவை, அவமானத்தை, அகற்றவல்லவன அல்லவே! எந்தப் பெரியார் குப்பை மேட்டில் கிடந்த கட்சியை தன் பலத்தாலும் உழைப்பாலும் மலை உச்சிக்குக் கொண்டு போனாரோ அதே பெரியார், இன்று அதே கட்சியை மலை மீதிருந்து படுபாதாளத்திற்கு உருட்டித் தள்ளுவது போன்ற இத் திருமண ஏற்பாட்டை மேற்கொண்டுவிட்டாரே, ஒருகணம் நினைத்தாலே உள்ளம் பதறுகிறதே, நம் உடல் நடுங்குகிறதே, கைகள் துடிக்கின்றனவே, கண்கள் நீரைப் பொழிகின்றனவே, இத்தகு நிலையில் நாம் இருக்க, பெரியார் மட்டும் எப்படி இவ்வளவு தைரியமாக, இவ்வளவு துணிச்சலாக, இவ்வளவு விரைவாக, இந்தத் திருமணச் சிறையில் தன்னைச் சிக்க வைத்துக்கொண்டார் என்பதை நம்மால் உணர்ந்துகொள்ளவே முடியவில்லையே!

பெரியார், நம் கொள்கைக்கு நேர் மாறாக, பொருந்தாத் திருமணம் செய்து கொள்ள முன்வந்தார் என்பதே நாம் நினைத்துப் பார்க்கமுடியாத பயங்கரமான நிகழ்ச்சி, ஆனால் இந்தத் திருமணம் ஏன் நடைபெற்றாக வேண்டும் என்பதற்கு அவர் சொல்லும் காரணமோ இந்தத் திருமண நிகழ்ச்சியைவிட ஆயிரம் மடங்கு பயங்கரம் நிறைந்ததாய் இருக்கிறது.

கட்சியையும் கட்சிப்பணத்தையும் அவர்காலத்திற்குப்பின்னும் ஒழுங்காகக் காப்பாற்றிவருவதற்கு, கட்சியில் உள்ள ஆயிரமாயிரம் மக்களில் மணியம்மையார் ஒருவரைத் தவிர வேறு யாருக்கும் திறமை இருப்பதாக அவர் நம்பவில்லையாம். ஆகவே மணியம்மையாரிடம் கட்சியையும் கட்சிப் பணத்தையும் அவர் ஒப்படைக்கப் போகிறாராம். அப்படி ஒப்படைப்பது சட்டப்படி செல்லத்தக்கதாக ஆகவேண்டுமானால் மணியம்மையாரை தன் மனைவியார் ஆக ஆக்கிக் கொண்டால்தான் முடியுமாம். எனவேதான் இந்தத் திருமணமாம். திருமணம் ஏன் என்பதற்கு பெரியார் தரும் "விளக்கம்" இது!

இந்த விளக்கத்தை ஒருமுறை படித்தாலே போதும் இந்த விளக்கம் எவ்வளவு அபத்தமானது, அர்த்தமற்றது இயக்கத் தோழர்கள் அனைவர் உள்ளத்தையும் புண்படுத்தக்கூடியது என்பது எவருக்கும் தானே விளங்கிவிடும்—நாம் விளக்கத் தேவையில்லை.

கட்சிப் பணத்தை கட்சியில் உள்ள யாரையும் கலந்து அவர்கள் எண்ணத்தை அறியாமல், கட்சி நிர்வாகக் கமிட்டியைக் கூட்டிக் கேளாமல், தானாக, தன் மனம் போன போக்கில் யாரோ ஒருவருக்கு பெரியார், எழுதிவைக்க முன்வந்திருப்பது முதல் தவறு. கட்சிப் பணத்தை மட்டுமல்லாமல்

(10-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய வேண்டிய பிராயச்சித்தம் யாதோ அதைச் சூத்திரனுக்கும் செய்க" என்று மனு அருளுகிறார்!

இங்நிலையில் நாம் இருந்தோம், சங்கரர் கூறும் யாக யக்ஞம் செய்துகொண்டு அவர்கள் வாழ்ந்தனர்.

**ஹோமத்தின் யோக்கியதை**

ஹோமத்தில் என்ன கண்டனர் அவர்கள்.

மனு அத்தியாயம் 3 சுலோகம் 257ல் ஹோமத்திரவியங்களைக் குறிப்பிடுகிறார். யாவை? செந்நெல்லின் சோறு! பசுவின் பால், சோமபதையின் சாறு, தீ நாற்ற மற்ற இறைச்சி. இவைகள் அவிசுகள் அதாவது ஹோமத்திற்குரியன.

அம்மட்டோ? மதுபர்க்கம் எனும் பண்டமும் அவர்களுக்குண்டு, அப்பண்டம் யாது? மாட்டிறைச்சியை நெய்யில் வேக வைத்து தேன் கலந்து செய்யும் சிற்றுண்டி.

**மறைந்துபோன மகாத்மியம்!**

இதுதான் மறைந்துபோனமகாத்மியம்; இதனை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்றுதான், ஜகத்குரு கூறுகிறார். இதற்குத்தான் முத்திராதிகாரிகள் கிளம்பியுள்ளனர். இந்தச் சேதியைத்தான் விருந்தாகத் தருகிறது மித்திரன். ததாஸ்து கூறுகிறது தினமணி!

முன்னாளில் இந் நிலை இருந்து பிராமண பூஜை குறைவற நடந்து, யாகம், யக்ஞம் சரிவர நடந்ததே, அதனை எதிர்த்துப் புரட்சி புரிந்து சூத்திரர்களை சூத்திரத் தன்மையினின்றும் மீட்க விரும்பியவர்களே அரக்கர் என்று ஆரியர்களால் அழைக்கப்பட்டனர். நம்மவரைக் கொண்டே நம்மவரை வீழ்த்தினர்.

ஆனால் பெரியதொரு புயல் கிளம்பிற்று. தோப்புகளிலிருந்த மரங்கள் ஆடின. பர்ணசாலைகள் காற்றில் பறந்தன. யாககுண்டங்கள் அழிந்தன ஹோமத்தீ அணைந்தது. தர்ப்பை தவித்தது. பார்ப்பனர் பதுங்கினர். வந்தது புத்துலக உணர்ச்சி. மேனாட்டு வாடை வீசிற்று. அதன் வேகத்தின் முன்பு யோகம், யாகம், யக்ஞம், ஜபம், தபம், எல்லாம் பறந்தன பஞ்சுபோல்!

கேட்கும் ஆட்கள் கிளம்பிவிட்டனர்.

**யாகமும், யோகமும், கிளைவையும், வெல்லெஸ்லியையும் தடுக்கவில்லை.**

**அஜமேத யாகம், ஆடுதின்ன உதவிற்றே தவிர ஆங்கிலேயனை விரட்ட முடியவில்லை! ஹோமப் புகை துப்பாக்கி வேட்டுப் புகை முன்பு மாயமாய் மறைந்தது.**

**அவைகள் எங்கே போயின?**

சங்கராச்சாரிகளின் பீடம் அக்காலத்தில் காலியாக இல்லை. அந்தக் காலத்தில் ஒரு யாகம் செய்து வெள்ளையனைத் தடுத்திருக்கக் கூடாதோ. வெள்ளையன் வேதமறியாத நீசன் என்றனரே, ஒரு வேள்வி செய்து அவனை விரட்டியிருக்கலாகாதோ? பிராமணர்கள் பூதேவர்களாயிற்றே, ஏன் வெள்ளையன் வந்ததும் கடையைக் கட்டிக்கொள்ளத் தொடங்கினர்?

எங்கே அந்த யாகயோகபலம்? திராவிடப் பெருங்குடி மக்களை ஏய்க்கப் போட்ட தபவேடம் என்னவாயிற்று? மக்களை மிரட்ட எழுதிவைத்துக்கொண்ட ஏடுகளில் காணப்படும் **பாசுபதாஸ்திரம், வருணாஸ்திரம், வாயுவாஸ்திரம். அக்கினியாஸ்திரம், மோகனாஸ்திரம், இந்திராஸ்திரம், ராமபாணம், திரிசூலம், தண்டம், கதை, மாகாளிவாள் இவைகள் எங்கே போயின?**

இத்தனையும் பொய் என்பதை மேனாட்டுப் படை எடுப்பும் அத்துடன் கலந்து வந்த புத்துலக வாடையும் காட்டி, மக்களை விழிப்படையச் செய்தது.

**இளைஞர்களை அழைக்கிறோம்**

பிறகே மக்கள் கண்டனர் யாகம், யோகம் என்ற பேச்சு பார்ப்பனர் போக போக்கியத்துடன் வாழவேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் சூது என்பதை. பிறகே அறிந்தனர் யாகம் தெரியாத பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா முதலிய வல்லரசுகள் வாழ்வதை! ராபர்ட் கிளைவ் துப்பாக்கியுடன் வந்து நாட்டைப் பிடித்தானே தவிர, தாமரைக் குளத்தருகே தனி இடம் அமைத்து தவம் செய்ததால் அல்ல என்பதை! தெரிந்தது மக்களுக்கு பார்ப்பனீயக் கொடுமை. கண்டனர் மக்கள் சரஸ்வதி பூஜை உள்ள நாட்டிலே 100-க்கு 90 பேர் தற்குறிகளாகவும், லட்சுமி பூஜை செய்யும் நாட்டிலே தரித்திரம் தலைவிரிகோலமாக ஆடுவதையும், சக்தி பூஜை செய்யும் நாட்டிலே, சக்கைகள் எனும் மனிதப் பிண்டங்கள் வாழ்வதையும், இவைகள் இல்லாத, தெரியாத நாட்டிலே, இன்பம் பெருகி இருப்பதையும்! எனவேதான் பார்ப்பனீயத்தை எதிர்த்தனர்.

**அன்றுதான் முக்கருந்த முனிவர்களின் இந்த "முத்திராதிகாரிகள்"**

காந்தியாரின் காலம் வந்தது அந்த வர்ணாஸ்ரமத்துக்கு ஒ… ஆசை பிறந்தது. எனவேதான் இன்று சங்கராச்சாரிகளின் ச… சலப்பு கேட்கிறது.

இதனைத் தேசியத் தோழர்கள் கேட்பதில்லை.

**முக்கருத்த முத்திராதிகாரிகளை ந… கருத்த காந்தீயர்கள் கேட்கமாட்டா… கள். இருவரும் ஓர் இனம். இ… விருவரையும் அடக்கி, இன்ப வா… வுக்கு மக்களை அழைத்துச் செல்வ… தான் பகுத்தறிவாளர் கடமை! இ… னைச் செய்யத்தான் இளைஞர்களை இருகை நீட்டி அழைக்கிறோம்.**

* * *

இந்தக் கட்டுரை பத்து ஆண்டு… களுக்கு முன்னால் நமது இயக்க ஏ… களில் வெளிவந்தது. கட்டுரை வெளிவந்து ஆண்டுகள் பத்… முடிந்துவிட்டன. என்றாலும் கட்டுரையில் குறிப்பிடப்படும் தின… மணி மித்திரன் ஹிந்து முதலி… ஆரிய ஏடுகளின் போக்கிலே அணு… வளவும் மாற்றம் ஏற்படவில்லை அந்த ஏடுகள் அத்தனையும் அன்று போலவேதான் இன்றும், ஆரிய… புரியினரின் சொகுசான வாழ்… கையை அப்பழுக்கின்றிக் காப்… பாற்றுவதிலேயும் திராவிட சமு… தாயத்தை மேலேறவொட்டாமல் அடித்து வீழ்த்துவதிலேயும் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன இனியேனும் காங்கிரஸ் திராவிடர்… கள் இந்த ஆரிய ஏடுகளின் நச்சு… நினைப்பை உணர்ந்து இவற்றை ஆதரிக்கும் மனப்போக்கை விட்… டொழிப்பரா?

---

"போர்வாள்"

---

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 5 0 0 |
| 6 மாதம் | ரூ. | 2 8 0 |
| தனிப்பிரதி | | 0 1 6 |

# திருமணத்தை நிறுத்திவிடுங்கள்: பெரியாருக்கு வேண்டுகோள்

## சென்னை மாவட்ட திராவிடர் கழகத் தீர்மானம்

சென்னை, ஜூன். 28—
சென்னை மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டியின் அவசரக் கூட்டம் ஒன்று நேற்று மாலை 6-30 மணிக்கு, மவுண்ரோட் மீரான் சாயுபு தெரு 1-வது (பெரியார்) இல்லத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் தோழர் சி. தங்கராஜ் அவர்கள் தலைமை வகித்தார். கீழ்க்கண்ட இயக்கப் பிரமுகர்களும், நிர்வாக உறுப்பினர்களும் வந்திருந்தனர்.

தோழர்கள் சி. தங்கராஜ் (மாவட்டத் தலைவர்), ஆர். டி. அரசு. எ. கே. சாமி, சி. ஆர். சின்னப்பன், கே. பக்தவத்சலம், பா. குருசாமி, பி. எஸ். ராமலிங்கம், சே. தேவ சகாயம், இ. வி. ராஜன், மா. இளஞ்செழியன் (பி. ஏ. ஆனர்ஸ்,) சத்தியவாணி முத்து, சி. வி. ராசன், ஏ. சுப்ரமண்யம், ஆர். கபால மூர்த்தி, கா. சொக்கலிங்கம், பா. கோவிந்தராசன், எம். எஸ். மணி, எம். சண்முகம், எஸ். எஸ். ராகவலு, ஆர். கோவிந்தசாமி, ஏ. ஜெயராஜ், வி. கன்னையா, ம. சம்பந்தன், கா. சிதம்பரம், வி. நெடுமாறன், கோ. செங்குட்டுவன், டி. எம். பார்த்தசாரதி, எம். குருநாதன், புலவர். செல்வராஜ், சி. கே. நாதன் முத்து கிருஷ்ணன், கா. சம்பந்தன், க. அலின், ர. இலக்குமணன், ர. வி. பாலசுந்தரன். பி. ஏ. எல். டி.; தி. பால சுப்ரமண்யம், சே. ஆரோக்கியதாசன், சு. நடராசன், தி. துரைசாமி, டி. ஏ. சித்தார்த்தன், வல்லி துரைராசன், ஆர். கே. முனுசாமி, அ. சங்கரய்யா, எம். ராஜி, வி. கே. சுப்பராயலு, சீனி வெங்கடசாமி, ஏ. சாமிநாதன், பி. எஸ். வாசன், மா. பிரான்சிஸ், மாசிலாமணி, சிவஞானம், சொ. கோ. முத்துக்குமாரசாமி, சி. டி. டி. அரசு, டாக்டர், கணேசன், பாவலர் அப்துல் காதர், வி. டி. பெரியசாமி, கே. கோவிந்தசாமி (செயலாளர்), கே. எம். கண்ணபிரான் (அமைப்பாளர்), என். வி. நடராசன், காஞ்சி மணிமொழியார் (தந்தி மூலம்) ஆகியோர்.

கமிட்டி கூட்டத் துவக்கத்தில் தலைவர் தோழர் சி. தங்கராஜ் செயலாளர் கே. கோவிந்தசாமி, ஆகியோர், பெரியார். கே. ஏ. மணி ஆகியோரின் பொருந்தாத் திருமணத்தையும் அதனால் இயக்கத்திற்கு ஏற்படும் பெரும் கேட்டினையும் விளக்கிக் கூறினர். தொடர்ந்து தோழர்கள் சி. டி. டி. அரசு, கே. எம். கண்ணபிரான், டி. எம். பார்த்தசாரதி, மா. இளஞ்செழியன், பாவலர் அப்துல்காதர், என. வி. நடராசன், ஆகியோர் நகரில் இதுபற்றி ஏற்பட்டுள்ள நிலையையும், பெரியார் அவர்களிடத்தில் நேரில் பேசியது பற்றியும் எடுத்துக் கூறினர். பின்னர், கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரே மனதாக நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்

1. திராவிடர் இயக்கத் தலைவர் பெரியார் அவர்களுக்கு வணக்கமுடன் விண்ணப்பித்துக்கொள்வது தாங்கள் தங்கள் 72-வது வயதில் 26 வயதான தோழியர் கே. ஏ. மணி, அவர்களை பதிவுத் திருமணம் செய்துகொள்ளப் போவதாக, ரிஜிஸ்ட்ரார் ஆபீசிலும், பத்திரிகைகளிலும், வெளிவந்துள்ளதைக்கண்டு இக்கமிட்டி வருந்துவதுடன், இவ்வேற்பாட்டால் எல்லா வகையிலும் இயக்கத்துக்கு இழுக்கு நேரிடுமாதலால், இதை உடனே ரத்து செய்ய வேணுமாய் கேட்டுக் கொள்வதுடன் ரிஜிஸ்ட்ராருக்குக் கொடுத்துள்ள நோட்டீசையும் உடனே வாபஸ் பெறுமாறு இக்கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

2. தாங்கள் தங்களது திருமண முயற்சியை வாபஸ் பெற்று விட்டதாக உடனே பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிட வேண்டுகிறோம். அப்படி வாபஸ் பெறவில்லையென்றால், பொதுக்கூட்டம் மூலம் மேலால் கண்டிக்கவேண்டியிருக்குமென்பதை வருத்தத்துடன் இக்கமிட்டி தெரிவித்துக் கொள்கிறது.

3. மேற்படி ஏற்பாட்டை வாபஸ் பெறுமாறு சென்னை மாவட்ட திராவிடர் கழகம் செய்திருப்பது போன்று ஒவ்வொரு மாவட்ட நிர்வாகக் கமிட்டியினரும், முக்கியஸ்தர்களும் உடனே தீர்மானம் நிறைவேற்றி தலைவர் பெரியார் அவர்களுக்கு அனுப்புமாறு வேண்டிக் கொள்கிறது.

(ஒப்பம்) சி. தங்கராஜ்
(தலைவர்)

K. கோவிந்த, சாமி
செயலாளர்
5 கண்ணப்ப ஆச்சாரி தெரு
பி. டி. மதராஸ்

சென்னை மாவட்ட திராவிடர் கழகம்
27—6—49

—

### பெரியார் விளக்கம் திருப்தியளிக்கவில்லை

சென்னை மாவட்ட திராவிடர் கழக நிர்வாக உறுப்பினரில் பலரும், இயக்க முக்கியஸ்தர்களுமான கீழ்க்கண்டவர்கள் 28-6-49 இரவு 8-30 மணிக்குக் கூடி, பெரியார் அவர்கள் தமது திருமண சம்பந்தமாய் 28-6-49 தேதி விடுதலையில் வெளியிட்டுள்ள அறிக்கை எவ்வகையிலும் திருப்தியளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டதுடன், இதுபற்றி மேலால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்பாக இருந்து ஆவன செய்வதென்றும் ஒவ்வொருவரும் தனித்தனியாக தங்களது

எண்ணத்தையும் உறுதியையும் தெரிவித்தனர்:

மேலும் இந்தி எதிர்ப்பு விஷயமாகத் தலைவர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுக்க முக்கியஸ்தர்கள் கூட்டமோ அல்லது கமிட்டிக் கூட்டமோ நடத்தினாலும் அது சமயத்திலும் தமது திருமண விஷயமாயும் இயக்க விஷயமாயும் கொண்டுள்ள ஏற்பாட்டை ரத்து செய்யாதவரை ஒத்துழைக்க முடியாதென்பதையும் தெரிவித்து விட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

## கூட்டத்திற் கலந்து கையொப்பமிட்டவர்கள்

C. D. T. அரசு
காஞ்சி மணிமொழியார்
மா. இளஞ்செழியன்
வேணு
R. S. மணி
C. தங்கராசு
ச. பால சுந்தரம்
வி. சங்கர நாராயணன்
பா. கோவிந்தராசன்
M. R. பாண்டியன்
P. V. முத்துசாமி
S. P. T. திராவிடமணி
K. கோவிந்தசாமி
சே. தேவசகாயம்
R. பாண்டியன்
வே. தா. பெரியசாமி
R. அங்கமுத்து
எ. ஜெயராமன்
S. கன்னியப்பன்
M. தருமன்
மூ. மதுரை
C. V. ராஜன்
பெருமாள்
R. சுப்பராயலு
கி. பக்தவச்சலம்
ஏ. எஸ். ராமன்
கா. சொக்கலிங்கம்
K. கண்ணபிரான்
சொ. அ. அ. பால்ராஜ்
A. சங்கரன்
C. கணேசன்
K. சுந்தர மூர்த்தி
N. V. நடராசன்
ம. சு. முத்து

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவேதான், இத்திருமணம்—பொருத்தமற்றது—நாம் கண்டிப்பது என்பதையும், அவர் செய்ய இருக்கும் ஏற்பாடு சமூகவாழ்வுக்கு, இயக்க நீதிக்கு முரண்பட்டது, நாம் ஒத்துக்கொள்ளாதது என்பதையும் பொது மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நிலையில், தலைவராக உள்ள, பெரியார் ஈ. வெ. ரா. தனது தவறுதல்களைத் திருத்திக் கொள்ளாத வரையில் என்னைப் பொறுத்தவரை நான் கழகத்திலிருந்தும், அதன் தொடர்புள்ள பணியிலிருந்தும் விலகிக் கொள்கிறேன் என்பதை இயக்கத் தொண்டர்கட்கும், தோழர்கட்கும் கடமையுணர்ச்சி காரணமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**க. அன்பழகன்.**

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி நிர்வாகத்தையே, தன் கட்சியை நடத்திச் செல்லும் உரிமையையே, தன் விருப்பப்படி யாரோ ஒருவருக்கு 'தானம்'' செய்ய முடியும் என்று பெரியார் எண்ணி அந்தப்படி நடக்க முன்வந்திருப்பது இரண்டாவது தவறு. கட்சியை நடத்துவதற்கு மணி அம்மையார் ஒருவரைத் தவிர வேறு யாருக்கும் தகுதி இல்லை என்று அவர் கூறுவது மூன்றாவது தவறு. மணியம்மையாரிடம் கட்சியையும் கட்சிப் பணத்தையும் கட்சி நிர்வாகத்தையும் ஒப்படைக்க வேண்டுமானால் அதற்குச் சரியான வழி அந்த அம்மையாரை மணம் செய்து கொள்வதுதான் என்று அவர் முடிவு செய்திருப்பது நான்காவது தவறு. இவை நான்கும் மன்னிக்க முடியாத தவறுகள் என்பதை யாருமே மறுக்க முடியாது.

ஒரு கட்சி அல்லது ஓர் இயக்கத்தின் தலைமைப் பதவி என்பது ஒருவர் மற்றொருவருக்குத் தானமாக அல்லது பரிசாக அல்லது அன்புக் காணிக்கையாகத் தரக்கூடிய ஒரு பொருள் அல்ல. கட்சி மக்களுக்கிடையே யாருக்கு அதிகச் செல்வாக்கும் அதிகப் புகழும் இருக்கிறதோ அவர்களின் கரத்திலேகட்சித்தலைமைதானாகச்சென்று தங்கும். இதுவரை பெரியார் அவர்களுக்கு, கட்சியில் உள்ள மற்ற யாவரையும்விட அதிகச் செல்வாக்கு இருந்துவந்தது, எனவே அவர் தலைவராக இருந்து வந்திருக்கிறார். இதுபோலவே அவர் காலத்திற்குப் பின்னால், கட்சியில் யாருக்கு அதிகச் செல்வாக்கு இருக்கிறதோ அவர், அப்போது, கட்சித் தலைவராக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். இதுதான் ஜனநாயக முறை. இதுதான் இயற்கை முறையும்கூட, இதை விட்டுவிட்டு, பெரியார், தனக்குப் பின்னால் மணி அம்மையார்தான் கட்சிக்கு, உரிமை உடையவர்கள் என்று கூறியதும், அறிவு ஆற்றல் அரசியல் அனுபவம் மக்களிடையே செல்வாக்கு முதலியவற்றில் சிறந்து விளங்குபவர்கள் கழகத்தில் வேறு பலர் இருக்க இவை ஒன்றுமே இல்லாத ஒரு சாதாரண இளம் பெண்தான் இவர்கள் அனைவரையும விட தலைமைப் பதவிக்குப் பொருத்தமானவர் என்று எழுதியதும், மணி அம்மையாரைத் தவிர "நம்பிக்கையான ஒருவர் கட்சியில் வேறுயாரும் எனக்குக் கிடைக்கவில்லை என்றால் அதற்கு யாரும் கோபித்துக் கொள்ளக் கூடாது" என்று இயம்பியதும் இயக்கத் தோழர்கள் அனைவருடைய உள்ளத்திலும் என்றென்றும் ஆற முடியாத மனப்புண்ணை உண்டு பண்ணிவிட்டன.

பெரியார் அவர்கள், மணியம்மையார் ஒருவரைத் தவிர மற்றபடி கட்சியில் உள்ள யாரிடமும் தனக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை என்று வெளிப்படையாக 19—6—49 விடுதலையில் எழுதிவிட்ட பிறகு, அதை மீண்டும் வலியுறுத்துவதுபோல 28—6—49 "விடுதலை"யில் அதேவாக்கியங்களை மறுபடியும், எடுத்துப்போட்டு தன் உள்ளக் கருத்தை நமக்கெல்லாம் நன்கு அறிவித்து விட்ட பிற்பாடு இனி, நாம் யார்தான், எப்படித்தான், பெரியாரை மட்டும நம்பி அவரைப் பின்பற்றி நடக்கமுடியும்? மணியம்மையாரைத்தான் நம்பமுடியும்—மற்ற யாரையும் நம்பமுடியாது என்று சொல்கிறாரே பெரியார், அப்படியானால் நாமெல்லாம் என்ன நம்பிக்கைத் துரோகிகளா, நாமெல்லாம் என்ன இதுவரை பெரியார் இட்ட கட்டளைகளை நிறைவேற்றத் தவறி இருக்கிறோமா, நாமெல்லாம் கட்சிப் பணி ஆற்றியதே கிடையாதா,

(2-ம் பக்கம் பார்க்க)




தொடர்கதை:

எட்டாம் பகுதி

## காமக் கனல்

என் தோளின் மீதிருந்த கையை வெடுக்கென எடுத்து, கீழே விடுத்தேன்! திடீரென்று ஒருவனது தோளின்மீது பாம்பு விழுந்துவிட்டு, அதனை அலறித் துடித்துக் கீழே தள்ளியதும், "அப்பா! இதனது விஷக்கடியினின்றும் தப்பினேமை!" என்றெண்ணி பெருமூச்சு விடுபவனது நிலையையே ஒத்திருந்தது, என் நிலையும். அந்நேரத்தில் "தாங்களா?" என்று அச்சமிக்க குரலில் கேட்டேன், அவளை!

"ஆமாம், நான்தான்! நான்... தங்களின்......" அவர் வாயினின்றும் வெளிவந்த வார்த்தைகள் இவ்வளவுதான்! சிலப்பதிகாரத்திலுள்ள சொற்களைவிட சிற்றிடையாளின் கண்கள் பேசிய சொற்கள் ஏராளம்! அவை ஏதேதோ பேசின! இச்சைக்கு இணங்கச் செய்ய எப்படி எப்படியோ தூயனை! வேண்டின!

சாந்தமான அவள் முகம் அப்பொழுது சிறிது விகாரமடைந்தது! கன்னியின் கவர்ச்சி மிக்க கண்களில், காமக் கனல் சுடர் விட்டெரிந்தது! மங்கையின் மார்பு விம்மி விம்மி அடங்கியது!

"தங்களது குடும்பப் புகழுக்கே இழுக்கிது! என் நிலைக்கு ஆபத்து! இது சரியல்ல, தகாது!"

"தகாது! இசைப் புலவரே எது தகாது? இளமையை இளமை நாடுவது தகாதா? பற்றியேற இடமின்றி காற்றில் தவியாய்த் தவித்துக்கொண்டிருந்த முல்லைக் கொடி, அருகேயிருந்த—தன் மனதிற்குப் பிடித்தமான—மாமரத்தின் மீது படர்வது தகாதா? சரியல்லவா?"

"ஏதேதோ பேசுகிறீர்! மன்னன் மகள் தாங்கள்! இளவரசி! பாட்டுப்பாடி வயிறு வளர்க்க இங்கு வந்தவரின் நாடுவிட்டு நாடு வந்தவரின் மகன் நான்! பாடகன்...! காமம் தங்கள் கண்களை மறைக்கிறது!"

"காமம்! உள்ளத்தில் எந்நேரமும் உலவி, இன்ப வீணையை மீட்டி இசை எழுப்பி விட்ட தங்களை அடைய நான் கொண்ட ஆசைக்குப் பெயர் காமம்! தனித்துப் பேசுவோமா, உள்ளத்தைத் திறந்து காட்டி உவகை தரவேண்டுவோமா என்றெல்லாம் என் உள்ளத்தில் ஆவல் அலைகளை எழுப்பிய காதலுக்குத் தாங்கள் சூட்டும் பெயர் காமம்!"

"காமமோ காதலோ எதுவாக விருந்தாலும் அதற்கு நான் தகுதியற்றவன்! மலைமீதிருந்து வான மண்டலத்தை நோக்கிப் பறந்து, சஞ்சரிப்பவர்கள் நீங்கள்! பள்ளத்திலிருந்து, சேற்றில் சிக்கி, தட்டுத் தடுமாறி நடப்பவன் நான்! தாங்களெங்கே, நான் எங்கே?"

"காதலுக்கு நினைப்பு முக்கியமே அன்றி நிலை முக்கியமல்ல!"

"ஊர் அறிந்தால் இதனை, சிரிக்கும்! உன் தந்தை அறிந்தால், உருளும் என்தலை!"

"ஊர் முதலில் சிரிக்கும், பிறகு அச்சத்தால் வாய்மூடிக் கிடக்கும்! தந்தை என்னிடத்தில்கொண்டுள்ள அன்பால், தங்களை ஒன்றும்செய்ய மாட்டார்!"

"உலகம் தங்களுக்கு இன்னும் தெரியவில்லை! மன்னரிடத்திலிருக்கும் அன்பைத்தான் தாங்கள் அறிந்திருப்பீர். அவர் கொண்டுள்ள ரத்த வெறியைத் தாங்கள் தெரிந்திருக்க மாட்டீர்கள்!........இது ஆபத்தான விளையாட்டு! இதில் சிக்கி விடாதீர், என்னையும் சிக்கவைத்துவிடாதீர்! நான் வருகிறேன்"

அவ்விடத்தை விட்டு நான் புறப்பட்டேன். அவள் பின் தொடர்ந்தாள்! இளவரசி மலர்க்கோதையின் போக்கு எனக்கு ஆச்சரியத்தையும் அச்சத்தையும் அருவருப்பையும் உண்டாக்கின!

"இளவரசி! அரசனின் மகள் அற்ப புத்தி! பெண்ணல்ல, பேய் அவள்! தலைக்கேறி விட்டது காம வெறி!"

"காமவெறியல்ல, காதல் உணர்ச்சி அது!"

"காதல்! யாரிடத்தில் காதல்? பாட்டுப் பாடிப் பிழைக்கும் என்னிடத்தில், நாட்டையாளும் காவலனின் மகளுக்கா காதல்? இதனை நம்பமுடியுமா?"

"ஏன் நம்ப முடியாது! மன்னன் மகளாக இருந்தால் என்ன, அவளும் பெண்தானே? அவளுக்கும் காதல் உள்ளம் உண்டல்லவா?"

"அரசனுக்கு இது தெரிந்தால், ஆபத்தல்லவா நேரும்?"

"கோழை போல் நடந்து கொள்ளாதே! கோதை ஒருவளுக்கு இருக்கும் தைரியம் கூட உனக்கில்லையா? அவளறியாளா, இதனால் அவளுக்கும் ஆபத்துண்டென்பதை! தெரிந்திருந்தும் உன்மேல் கொண்ட காதலால், உன்னை நாடி வந்தாள்! வேண்டி நின்றாள்! கன்னி உள்ளம் தத்தளிக்கிறது! காளை நீ, அவளைக் களிகொள்ளச் செய்!

"இப்பொழுதும் ஆபத்திற்குநான் அஞ்சவில்லை ஆனால் பழிச்சொல்லுக்குத்தான் நான் நடுங்குகிறேன்!"

"வேடிக்கையாக இருக்கிறது! ஏதேதோ உள்ளக் குழப்பம் கொண்டு இளம்பெண்ணின் வாழ்வைப் பாழாக்காதே! இதோபார்! வார்த்தெடுத்த தங்கச் சிலைபோலின் தொடர்கிறாளே அவளைப்பார்! அவள் வேல் விழிகளைப்பார், சிவந்து துடிதுடிக்கும் தேன் இதழ்களைப்பார்! பளபளப்பான கன்னங்கள், பட்டுப்போன்றமேனி, அதிலே இளமையின் புன்னகை... இவற்றைப்பார்! அழகியின் அருகேசென்று, அவள்மலர்க்கரத்தைப் பற்றி, மார்போடு சாய்த்து, கூந்தலைக்கோதிவிட்டு, குளிர் கன்னத்தைத்தடவிக்கொடுத்து, இறுக அணைத்து, முத்தம்தந்தால் எப்படி இருக்கும்? சிந்தித்துப்பார்! ...

சிந்தித்துப்பார்! வாலிபன் நீ, வனப்பு மிக்க கன்னி அவள்! உன் காதலுக்கு ஏங்கி நிற்கிறாள்! காலம் கடத்தாதே, கட்டுடலாளின் இச்சையைப்பூர்த்திசெய்! இன்பம் கொள்ளச்செய்! நீயும் இன்பம் கொள்!...

இப்படி என் உள்ளத்தில் இரு குரல்கள் பேசின! திரும்பிப் பார்த்தேன்! ஏக்கத்தோடு, பசிகொண்ட கண்களால் என்னை நோக்கினாள்! அவளை நாடி நடந்தேன்! முன்நோக்கி அவள் வந்தாள்! பூஞ்சோலையில் புது இன்பம்!

கள்ளத்தனமாக இப்படிப்பல நாட்கள், களிப்புக் கடலில் நாங்கள் மூழ்கிவந்தோம்.

அரண்மனையின் நந்தவனம்! தனித்த ஒருமேடை! அதன் பின் திரைபோல் தாழைக்கன்றின் பெரிய இலை! அந்த மேடையின் மீது இளவரசி மலர்க்கோதையின் வருகை நோக்கி நான் காத்திருந்தேன். மான்போல் துள்ளி வருபவள் அன்று மெதுவாகநடந்து வந்தாள்! எழுந்துபோய், அவளை அழைத்துக்கொண்டுவந்து மேடையின் மீது உட்கார்ந்தேன்! எங்களுக்குப் பின் தாழை இலை பச்சைப்பசேலென அழகாக நின்றிருந்தது!

இளவரசியின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தது! அவள் முகத்தில் கப்பிக்கொண்டிருந்த சோக மேகங்கள் இன்னும் கனத்தன! ஒன்றுமே புரியாமல் நான் திகைத்தேன்! "கண்ணே ஏன் கலங்குகிறாய்? நம் காதல் உன் தந்தைக்குத் தெரிந்துவிட்டதா? அவர் கோபித்துக்கொண்டாரா?... ஏன் பேசாமலிருக்கிறாய்? நடந்ததைத்தான் சொல்லேன்! என்று கேள்விக்குமேல் கேள்வியாக, அடுக்கியடுக்கி அவளைக்கேட்டேன்!

அவள் வாய்திறவாமல், தேம்பித் தேம்பி அழுதாள்! கண்ணீரைத் துடைத்தேன்.

"கள்ளக்காதல் அனைவருக்கும் தெரிந்து விட்டதா? கோதாய் வாய்திறந்து பேசேன்! உன் தந்தை..."

"என் தந்தை-அவரைப்பார்த்து இன்று நாடு சிரிப்பாய்ச் சிரிக்கிறது!"

"உன் தந்தையைப் பார்த்தா, பாண்டிய மன்னனைப் பார்த்தா, நாடுசிரிக்கிறது! ஏன்? எதற்காக?'

"அழுது அழுது அம்மாவின் கண்கள் சிவந்து விட்டன! என் அண்ணனுக்கு இதைப்பற்றிக் கவலையே இல்லை!"

"ராணி அழுகிறார்களா?

"ஆம் கதறுகிறார்கள்!

நிலைமை இப்படியே நீடித்தால் அழுது அழுது செத்தே போவார்கள்!... இதற்குத் தாங்கள்தான ஒரு வழி சொல்ல வேண்டும், தங்களின் உதவி அவசியம் வேண்டும்!"

"செய்தி இன்னதென்று சொல்லாமல், புரியாமல் பேசிக்கொண்டிருந்தால் நான் என்ன கூற முடியும்! ராணி அழக்காரணம்?..."

"காமத்திற்குப் பலியானதால்!"

"யார்? மகாராணியா காமத்திற்குப் பலியாகிவிட்டார்?"

"இல்லை, மன்னர் காமத்திற்குப் பலியாகிவிட்டார்! அவரை மீட்க வேண்டியது, நம்கடமை! தங்கள் உதவியைத்தான் நான் நம்பியிருக்கிறேன்!" என்று கூறி திரும்பவும் அவள் தேம்பி அழத் தொடங்கி விட்டாள். அவளுக்குத் தேறுதல் கூறினேன். செய்தியை விளக்கமாகக் கூறும்படி கேட்டேன். அவள் சொல்ல ஆரம்பித்தாள்.

"வடநாட்டிற்கு என் தந்தை சென்றார், ஒரு ஆரிய மன்னனோடு போரிட! போரிட்டார். எதிர்த்த ஆரிய மன்னனைத் தோற்கடித்தார். வெற்றிபெற்று திரும்புகையில் ஒரு ஆரியன் இவருக்குத் தோழனும்! அந்த ஆரியனையும், அவன் குடும்பத்தையும் பாண்டியநாட்டிற்கே பிறகு வரவழைத்துக் கொண்டார்! மதுரையின் ஒரு பகுதியில் இப்பொழுது அவர்கள் வசித்துவருகிறார்கள்! அந்த ஆரியனுக்கு அழகியமகள் ஒருவள் இருக்கிறாள்! இந்த ஒழுங்கீனச் செயலை, முறையற்ற நடத்தையைச் சொல்லவும் என் நா கூசுகிறது. பலநாட்களாக எனக்கு இச்செய்தி தெரியும். ஆனால் தங்களிடத்திலும் உயிருக்கு உயிராகக் கண்ணி இரண்டறக்கலந்து பழகும்தங்களிடத்திலும் இதனைக் கூறாமலேயே மறைத்து வைத்திருந்தேன். இது வெளியானால், குடும்பத்தின் கௌரவத்திற்கும், அரச பரம்பரையின் மேன்மைக்கும் புகழுக்கும் இழுக்கு நேரிடுமோ என்று அஞ்சி நடுங்கினேன்! அதனால்தான் தங்களிடம் கூட இதனை நான் கூறவில்லை. என் தந்தைக்கு இப்பொழுது வயதென்ன இருக்கும்? இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனான ஒரு மகன் இருக்கிறான், அவருக்கு! காதல் புரியக்கூடிய பருவம் கொண்ட மகள் இருக்கிறாள்! இந்த வயதிலா காமம்! காமத்திற்குப் பலியா ஆவது, எட்டுத்திக்கும் புகழ் பரப்பிய பாண்டிய நாட்டு மன்னன்! வெட்கமும் வேதனையும் என்னை வாட்டுகின்றன! என் நெஞ்சம் குமுறுகிறது! காமம் அவர் கண்களுக்கு வர்ணத்திரை யிடுகிறது! என் அன்னை உயிரோடிருக்க, வேறொருவள் பட்டத்து ராணியாக வர முயலுவதா?......"

"என்ன? என்ன?" என்று திடுக்கிட்டுப் பதை பதைக்கக் கேட்டேன் நான். மலர்க்கோதை முகத்தை மூடிக்கொண்டு அழுதாள். தைரியம் கூறினேன். என்னால் முடிந்ததை செய்வதாக, அவசியமானால் என்னையே தியாகம் செய்வதாக அவளுக்கு உறுதி கூறினேன். கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அவள் பேசினாள்.

"பாண்டிய நாட்டிற்கு உரிமை கொண்டாட ஒரு ஆரியப் பெண்ணா? இதனை எண்ண எண்ண வேதனை அதிகமாகிறது! நெஞ்சம் பதறுகிறது! மக்கள் ஆத்திரத்தில் சிரிக்கிறார்கள்! கேலிச் சிரிப்பா அது? அல்ல; அல்லவே அல்ல! வேதனைச் சிரிப்பு! இந்த முயற்சியை; ஆரியப்பெண்ணின் ஆட்சியைத் தாங்கள்தான் எப்படியாவது தடுக்க வேண்டும்!......"

"உன் அண்ணனுக்கு இது தெரியாதா?"

"தெரியும், நன்றாகத் தெரியும்! ஆனால் அவர் என்ன செய்ய நினைத்துள்ளார்; அதுதான் புரியவில்லை! உடன் இருப்பவர்களே, பக்கமிருந்து பழகுபவர்களே புரிந்து கொள்ள முடியாமல் நடந்து கொள்வார்—அங்குதான் வேதனை பிறக்கிறது! அவருக்கு இதிலெல்லாம் அதிக அக்கரை இருப்பதாக வெளியில் காட்டிக்கொள்ள மாட்டார்! பாசறைக்குள் நுழைவார். வாளெடுப்பார், அதன் கூர்மையைத் தடவிப் பார்ப்பார்! சரியான வேல்தானா இது? எதிரிப் படையைப் புறமுதுகு காட்டி ஓடும்படிச் செய்ய, இப்படி எவ்வளவு வேல்களும் வாள்களும் தேவை என்று சிந்திப்பார்! கோழைகளை வீரர்க

(2-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kunchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)